International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 01 January to March 2022 www.irjtsjournal.org

# 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், காலனித்துவ முஸ்லிம் உலகின் சமய, சமூக, அரசியல், நிலைகள் - ஓர் ஆய்வு

முகம்மது தம்பி முகம்மது றிஸ்வி
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*இஸ்லாமிய கற்கைகள் துறை*
*கிழக்குப் பல்கலைக் கழகம்*

**ஆய்வுச் சுறுக்கம்:** *முஸ்லிம் உலகம் ஐரோப்பிய காலனித்துவத்தின் கீழ் படிப்படியாக 20 ஆம் நூற்றாண்டின் முதற் பாதிப்பகுதி முடியும் வரையில் சிக்கித்தவித்து, சமய, சமூக, அரசியல் ரீதியாகவும் சீரலிந்து காணப்பட்டது. இதிலிருந்து விடுதலை பெற்று முஸ்லிம் உலகம் சுதந்திரமடைவதற்கு மக்களின் இரத்தத்தையும்,வளங்களையும் பெரும் விலையாக கொடுக்க வேண்டி இருந்தது. காலனித்துவ ஆதிக்க வாதிகளுக்கெதிரான நீண்ட நெடிய போராட்டத்தின் பின் பல முஸ்லிம் நாடுகள் சுதந்திர நிலையை பெற்றுக் கொள்ள முடிந்தன. இந்தவகையில் 20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் காலனித்துவ முஸ்லிம் நாடுகளில் காணப்பட்ட சமய, சமூக, அரசியல் நிலைகள் மிகக் கவலைக்கிடமானதாகவே காணப்பட்டன. அவை பாரிய சீர்திருத்தங்களை வேண்டி நின்றது. இப்பின்னணியில் காலனித்துவ முஸ்லிம் நாடுகளில் காணப்பட்ட சமய, சமூக, அரசியல் நிலைப்பாடுகளை வெளிக் கொணரும் நோக்குடன் மேற் கொள்ளப்பட்டுள்ள இவ் ஆய்வானது இன்றைய 21 ஆம் நூற்றாண்டின் முஸ்லிம் நாடுகளின் நிலைப்பாடுகளை அதன் முன்னேற்றங்கள், மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது.*

**திறவுச் சொற்கள் :-** *காலனித்துவம்,முஸ்லிம் உலகு,சுதந்திரம்,சீர்திருத்தம்.*

**அறிமுகம்:** முகம்மது நபி(ஸல்) அவர்களுடைய காலம் (கி.பி. 611) முதல் உஸ்மானிய கிலாபத் ஆட்சி கி.பி. 1924 இல் வீழ்ச்சி காணும் வரை முஸ்லிம் உலகு எல்லா வகையிலும் பலம் பெற்றுக் காணப்பட்டது. இஸ்லாம் உலகை ஆண்டு கொண்டிருந்தது. இஸ்லாமிய அரசியல் பலம், சமூக ஒற்றுமை, சமய வழிகாட்டல்கள் ஐரோப்பாவை ஆட்டங்காணச் செய்து கொண்டிருந்தது. ஐரோப்பாவின் இருண்ட காலமாக அக்காலம் வரலாற்றில் இன்றும் பேசப்படுகிறது. அன்று இஸ்லாம் பலம் பொருந்திக் காணப்படுவதற்கு இரண்டு விடயங்கள் அடிப்படையாக அமைந்திருந்தது ஒன்று இஸ்லாமிய மார்கத்தோடு முஸ்லிம்கள் இணைந்து வாழ்ந்தமை இரண்டு ஒற்றுமையாக செயற்பட்டமை. இந்நிலையில் ஐரோப்பாவின் மறுமலர்ச்சியும், அறிவியல் புரட்சியும் இஸ்லாமிய உலகை ஆட்டங்கான வைத்தது ஐரோப்பா மேற்கொண்ட மூன்று திட்டங்கள் முஸ்லிம்நாடுகளை கூறுபடுத்தியது அதாவது முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக பிளவுபடுத்தியமை, முஸ்லிம் தேசங்களின் வளங்களை சுரண்டியமை, முஸ்லிம்களை சமயத்தை விட்டும் தூரப்படுத்தியமை போன்ற காரணிகளால் இஸ்லாமிய உலகு தோல்வி காணத்தொடங்கியது.

அது வரை உஸ்மானிய சாம்ராஜியத்தின் தலைநகராக விளங்கிய துருக்கி ஐரோப்பாவின் நோயாளி என அலைக்கப்படும் நிலைக்கு மாரலானது.மதச்சார்பற்ற,சடவாத சிந்தனைகள் உலகை ஆளத் தொடங்கியது. முஸ்லிம் உலகம் இன்று வரை பலவீனமான நிலையிலேயே காணப்படுகிறது.அதனை மீளக்கட்டியெழுப்பும் பணிகளும் சீர் தீரத்த முயற்சிகளும் இடம் பெற்றும் கொண்டிருக்கிறது.

எனவே முஸ்லிம் உலகின் இறைய நிலையை அறிந்து கொள்வதற்கு, 20 நூற்றாண்டின் ஆரம்ப கால முஸ்லிம் உலக நிலையை அறிந்து கொள்வது கட்டாயமாகும் என்ற வகையில் “20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், காலனித்துவ முஸ்லிம் உலகின் சமய, சமூக, அரசியல், நிலைகள் - ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் இவ்வாய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.அதற்றகாக பரவலான வாசிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் இவ்ஆய்வுக்கட்டுரைக்கான அடிப்படைத்தகவல் பெறப்பட்டன. அத்தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மூத்த பேரறிஞர்களிடம் ஒப்பு வித்து சரிபார்க்கப்பட்டது.அது இவ் ஆய்வுக்கான இரண்டாம் நிலை தரவுகளாக கருதப்படுகின்றது.

*20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில்* **முஸ்லிம் நாடுகளின் சமய நிலை.**

ஐரோப்பிய காலனித்துவ முஸ்லிம் நாடுகளில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதிக்குள் இஸ்லாத்தின் வளர்ச்சியையும், அதன் செயற்பாடுகளையும் தடுப்பதற்கு அதன் எதிர் சக்திகள் முயற்சித்துக்கொண்டிருந்தன. இந்த வகையில் முஸ்லிம் உலகின் சமய நிலை மிகவும் பரிதாபத்தை தாங்கி நின்றதோடு, அது சீர்திருத்தத்தை வேண்டி நின்றது. அன்று இஸ்லாத்திற்குள்ளாகவே அதனைக் கொச்சைப்படுத்தவும், வீழ்ச்சியுரச்செய்யவும் பல முயற்சிகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அந்த வகையில்தான் ''காதியானிசம்'' தோற்றுவிக்கப்பட்டது. ''ஷியாஇஸமும்'',''பஹாஇஸமும்'' வளர்க்கப்பட்டது. இவற்றோடு இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் வெளி ரீதியான தடையாக கிறிஸ்தவமும், யூத ஸியோனிஸ்ட்களும், சட வாத மாக்ஸிஸமும் வலுப்பெற்றிருந்தது. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மீர்ஸா குலாம் இஸ்ஹாக் அகமது காதியானி என்பவரை ஐரோப்பா தனது கை பொம்மையாகப்பயன்படுத்தி இறுதி நபித்துவத்துவத்திற்கெதிராக அவனை தூண்டி விட்டது. அவன் இஸ்லாமிய அடிப்படை சமய நம்பிக்கையான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்தினர். அவர் தான் ஒரு நபி என்று பிரச்சாரம் செய்து, தன்பால் பலரை ஈர்த்துக்கொண்டது மாத்திரமன்றி, ஜிஹாத் இஸ்லாத்தின் கட்டாயக் கடமையல்ல என்பது போன்ற சிந்தனைகளை சமூகத்தில் பரப்பி இஸ்லாத்தில் குழறுபடிகளை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்த காலப்பகுதியாகவும் இக்காலப்குதி காணப்பட்டது. மாத்திரமல்லாது ஈரானில் வளர்ந்து வந்த ஷியாயிஸ சிந்தனைகளை பல முஸ்லிம் நாடுகளிலும் காலனித்துவ வாதிகள் தூண்டிவிட்டு முஸ்லிம்களிடையே சமய உற்பூசல்களையும், திரிபுகளையும் ஏற்படுத்திவிட்டனர்.

மேலும் இக்கால யூத சியோனிஸ சக்திகளின் மிக முனைப்பாக வளர்ந்த மாஸோனிய இயக்கம் இஸ்லாத்திற்கெதிராக செயற்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. பாலஸ்தீனை ஆக்கிரமிப்பது அவர்களின் விரிவான திட்டத்தின் முதலாது அம்சமாகும். யூப்பிரட்டீஸ் நதியிலிருந்து நைல் நதி வரையுள்ள பகுதிகளையும், ஹிஜாசிலிருந்து மதீனா உட்பட ஸிரியா பகுதிகளையும் ஆக்கிரமிப்பதும், நாடற்ற நிலையில் உலகின் பல பகுதிகளிலும் சிதறி வாழ்ந்த யூதர்களை இப்பகுதியில் குடியேற்றி ''யூத'' சமயத்தை நிலை பெறச்செய்வதும் அவர்களது இலட்சியமாக இருந்தது.

இவர்கள் சகோதரத்துவத்தையும், அன்பையும் விரும்புகின்ற ஒரு மனிதாபிமான அமைப்பாக மாசோனிய யூத இயக்கம் தன்னைக் காட்டிக் கொண்டவர்களாக இஸ்லாமிய மார்க்கத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணமே வலுப் பெற்றுக்காணப்பட்டது. இவ்வியக்கத்தின் மனிதாபிமானப்பிரச்சாரங்கள் மிக நுணுக்கமாகவும், ஆழமாகவும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக பல இஸ்லாமிய அறிஞர்கள் கூட அன்று தங்களை இவ் இயக்கத்தோடு இணைத்துக்கொண்டு ஏமாந்தனர். அல்லாஹ்வினால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரே சமூகமாகவும், உலகில் ஒரே சமயமாகவும் தமது யூத சமூகத்தையும், சமயத்தையும் கருதிய இவ் இயக்கமானது ஏனைய சமயங்களை அழித்தொழிக்க வேண்டும் என்ற தெளிவான இலட்சியத்தோடு அன்று செயற்பட்டது.

மேலும் இஸ்லாத்தின் புனித போதனைகளிலும், அதன் மூலாதாரங்களிலும் சந்தேகங்களை ஏற்படுத்த நினைத்த கீழைத்தேயவாதிகள் இக்காலப்பகுதியில் ஐரோப்பிய காலனித்துவத்தின் துணையுடன் செயற்பட்டனர். இஸ்லாமிய சமய விடயங்களில் பாரிய ஊடுருவல்களைச் செய்தனர். கீழைத்தேயவாதிகளின் விசமத்தனங்கள் இஸ்லாத்திற்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டது. அல்-குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடுகள், இஸ்லாமிய சட்டக்கலை, வரலாறு, நாகரிகம், அரபு மொழி என்பன தொடர்பாக இவர்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு வாதங்கள் காரணமாக சமய நிலை கவலைக்கிடமான நிலைக்கு ஆற்பட்டது.

இந்த கீழைத்தேய வாதிகளின் இஸ்லாத்தை சீர்குழைக்க வேண்டும் என்ற முயற்சியின் பலனை அடைவதற்காக முஸ்லிம் நாடுகளில் பல நடவடிக்கைகளை மேற் கொண்டனர். இவர்கள் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பிழையாக சித்தரிக்கும் சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் வெளியிட்டனர். முஸ்லிம் நாடுகளிலுள்ள பாடசாலைகள், அநாதை மடங்கள், அகதி முகாம்களுக்கு தமது கிறிஸ்தவ மதப்பிரச்சாரகர்களை அனுப்பி அவர்களது கொள்கைகளைப்புகுத்த முயற்சித்தனர். இவர்களது முயற்சிகளின் பலனாக மதம் என்பது ஒருதனிப்பட்ட சமாச்சாரமாகும். அது இறைவனுக்கும், மனிதனுக்குமிடையேயுள்ள இயல்பூக்க உள்ளுணர்வின் ஒரு தொடர்பேயாகும். சமயத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் சமயத்திற்கு எந்தப்பங்கும் இல்லை என்ற கருத்து நிலவத் தொடங்கியது. கீழைத்தேய வாதிகளின் இத்தகைய நடவடிக்கைகள் காலனித்துவ முஸ்லிம் நாடுகளின் சமய நிலையை பெரிதும் பாதித்தது. இதனால் சமய சார்பற்ற அறிஞர்கள் தோன்றினார்கள். சமயம் ஆட்சியிலிருந்து ஒதுக்கப்படும் நிலை தோன்றியது. உதாரணமாக துருக்கியின் கமால் அத்தாதுர்க் சமய சார்பற்ற போக்கில் சமய ரீதியான சட்டங்கள் பலதைத்தடுத்தார் ஏலவே குறிப்பிட்டது போல அவர் ஹிஜாப் அணிவதை பெண்களிடமிருந்து தூரமாக்கினார். அறபு மொழி புரக்கணிக்கப்பட்டு துருக்கி மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ''அதான்'' கூட துருக்கி மொழியில் சொல்லப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும், தொழுகையின் கிரியாம்சங்கள் கூட துருக்கி மொழியிலேயே இடப்பட வேண்டும் என்ற அவலமும் ஏற்பட்டிருந்தது. கமால் அத்தாதுர்க் ஒரு தடவை தனது நண்பர் ஒருவரிடம் -**''துருக்கியர் அனைவரையும் கிறிஸ்தவர்களாக மதம்மாற்ற முடியுமாயின் நான் அதை விரும்புகிறேன்''**என்று கூறும் அளவுக்கு சமய நிலை மிகக்கவலைக்கிடமாகக் காணப்பட்டது.

பொதுவாக இஸ்லாத்தை விமர்சிக்கும் கீழைத்தேய ஆய்வாளர்கள் (Oriantalists),கீழைத்தேய ஆய்வு என்ற பொதுவெளியில் குறிப்பாக இஸ்லமிய அரங்கில் முகாமிட்டு இஸ்லாத்தை அகலமாக கற்று,அனுகி அதில் சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி, அதனை செல்லாக்காசாக மாற்றும் செயற் பாடுகளை செய்தனர்.

இதனை La Conquered du Monde Musliman எனும் கட்டுரையில் La Chatelar என்ற கீழைத்தேய ஆய்வாளர் ஒருவர் இப்படி எழுதுகிறார்

''முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பலவீனமடையச் செய்வதில் நமது பிரச்சாரகர்கள் தோல்வி கண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. இருந்த போதிலும் மேற்கத்தேய மொழிகள் வாயிலாக கருத்துக்களை முஸ்லிம்கள் மத்தியில் பரப்புவதாலும், ஐரோப்பாவில் வெளியிடப்படுகின்ற நூல்கள்,சஞ்சிகைகள் என்பவற்றோடு முஸ்லிம்களை இணைப்பதனாலும் மேற்குலகத்தோடு சங்கமிக்கச் செய்யலாம். அது முஸ்லிம்களை லோகாயுத துறையில் முன்னேற வழிகோழும். அப்போதே இது வரை முஸ்லிம்களின் தனித்துவத்தை பாதுகாத்த இஸ்லாமிய கோட் பாடுகளையும் கருத்துக்களையும் சீர்குலைக்க முடியும். நமது இலட்சியத்தில் நாம் வெற்றி காணமுடியும்'' இக்கருத்து இஸ்லாமிய கருத்தியல்கள் மீதான பொதுவான கால்புணர்வை வெளிப்படுத்துவதோடு, உண்மைகளை மறைக்க முயற்சிக்கும் செயற்பாடுமாகும்.

மேலும் முஸ்லிம் உலகில் அன்று இஜ்திஹாதின் வாயல் படிப்படியாக அடைபடத்தொடங்கியது. தக்லீதின் வளர்ச்சி எழுச்சி பெறத் தொடங்கியது. அல்குர்ஆன் சுன்னாவின் அடியாகச் சிந்தித்து, தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பண்பாடுகள் மறைந்து, மேற்கத்தேய சட்டங்களில் அதற்கான தீவுகளைத் தேட முயன்றனர். அன்று தக்லீத் சிந்தனை சமய நிலையை பெரிதும் பாதித்தது. கம்பு எடுத்தவர்கள் எல்லாம் வேட்டைக்காரன் என்பது போல இஸ்லாமிய அடிப்படை மூலாதார அறிவற்ற, இஜ்திஹாத் தகைமையற்ற, குறைமதியுடையவர்கள் இஸ்லாத்திற்கு விளக்கம் கூறத் தலைப்பட்டிருந்தனர்.

இக்காலப்பகுதியில் இஸ்லாமிய சட்டக்கலையான பிக்ஹ் கலை வளர்ச்சி கூட தேக்க நிலைக் காலமாகத் திகழ்ந்தது. ஐரோப்பாவின் நேரடியான ஆட்சிக்கும், செல்வாக்கிற்கும் உட்பட்ட முஸ்லிம் நாடுகளில் ஷரீஆ சட்டத்தை புறக்கனிப்பதற்கான சூழல் உருவாக்கப்பட்டிருந்தன. நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாக இருந்து வந்த இஸ்லாமிய ''ஷரீஆ'' சட்டத்தை மாற்றி, தம் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் உரோமன், டச்சு சட்டத்தை அறிமுகப்படுத்தி, ஷரீஆ சட்டத்தை ''தனியார் சட்டம்'' என்ற எல்லையுள் மட்டுப்படுத்தினர். துருக்கியில் கமால் அத்தாதுர்க்கின் குழுவினர் சுவிச்சர்லாந்தின் சிவில் சட்டத்தொகுப்பை ஏற்றுக்கொண்டதையும், இத்தாலிய தண்டனைச் சட்டத் தொகுப்பையும், ஜேர்மனிய வர்த்தகச் சட்டத்தையும் இஸ்லாமிய சட்டத்துக்கு மாற்றுச்சட்டமாக இணைத்துக் கொண்டதையும் நாம் காணலாம்.

ஈரானில் இஸ்லாமிய சட்டத்தின் மாற்று சட்டமாக பிரான்ஸ் சட்டத்தை அறிமுகப்படுத்தினர். ஆப்கானிஸ்தானில் கான் என்ற அரசர், முஸ்தபா கமாலின் போக்கைப்பின்பற்ற முயற்சித்தார். முஸ்லிம் அரசு என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட பாகிஸ்தானில் அதன் ஷரீஆ சட்டங்கள் வெறும் எழுத்து வடிவிலும், உயிரோட்டத்திலும் உலகாயுத திட்டத்தைக் கொண்டதாகவே காணப்பட்டது. சுருங்கக் கூறின் அன்று இஸ்லாமிய ஷரீஆ சட்டமானது கண்டும் காணாதது போல் கைவிடப்பட்ட துர்ப்பாக்கிய நிலையிலேயே காணப்பட்டது.

***20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில்* முஸ்லிம் நாடுகளின் சமூக நிலை.**

20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஐரோப்பிய காலனித்துவ முஸ்லிம் நாடுகளின் அரசியல் நிலை சீர் கெட்டிருந்தமையாலும், சமய நிலை பாதிப்புற்றிருந்தமையாலும். அன்றய சமூக நிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. காலனித்துவ ஆட்சியில் முஸ்லிம் சமூகம் தம்தனித்துவத்தை இளந்துவிடும் அளவு அச்தசுறுத்தலை எதிர் நோக்கிய போது, முஸ்லிம் சமூகம் வீழ்ச்சியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. இஸ்லாம் ஒரு வாழ்வியல் திட்டம் என்ற முறையில் குடும்ப அமைப்பை முழு சமூக அமைப்பிற்கும் அடிக்கல்லாக கோடிட்டுக் காட்டியுள்ளது.

**“நவீன துருக்கி”**என்ற நூலில் பேராசிரியர் முஹம்மது இஸ்ஸத் டிரோஸா குறிப்பிடும் போது – அத்தாதுர்க்கின் தனிப்பட்ட வேண்டுகோளின் பெயரிலேயே துருக்கிய பெண்களின் முகத்திரை (ஹிஜாப்) நீக்கப்பட்டது. அவர் பகட்டான நடனக்கச்சேரிகளை ஏற்பாடு செய்து இராணுவ அதிகாரிகளை இளம் பெண்களுடன் ஆடிப்பாடுவதற்குத் தூண்டினார். இதை மறுத்தவர்களுக்கு இது இராணுவ உத்தரவு எனவே ஏற்றுத்தான் ஆக வேண்டும் என வற்புருத்தப்பட்டது. இறுதியாக குடும்ப உறவுகளும், கட்டுக்கோப்புகளும் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டன இது இழிவுக்கும், ஒழுக்கக் கேட்டிற்கும் வழிவகுத்து, சமூகத்தை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்றது.

அன்றய சமூகத்தை சீரழிவின் பால் இட்டுச் செல்ல **“பெண்கள் விடுதலை”** என்ற மிகவும் தாக்கம் செலுத்தக் கூடிய சிந்தனையை ஐரோப்பியர் பயன்படுத்தினர். அதனைப் பயன்படுத்த பெண்களைத்தூண்டி விட்டனர். நவீனத்துவ வாதத்தின் பால் கிழரிவிட்டனர். நவீன மயமாக்கும் நவீனவாதத்திற்கு முஸ்தபா கமால்தான் முன்மாதிரியாகத்திகழ்ந்தார்.

தூனிசியாவின் முஜாஹித் என்றழைக்கப்படும் முந்நாள் ஜனாதிபதி முதலில் தூனிசியப் பெண்களின் தலையை துணியால் மூடிக்கொள்வதை தடை செய்தார். துருக்கியில் பெண்கள் பள்ளிக்கூடங்களில், பல்கலைக்கழகங்களிலும் படிக்க வேண்டுமானால் அவர்கள் தங்கள் தலை முக்காடுகளை அகற்றிக் கொள்ள வேண்டும். சிரியாவில் முக்காடு அணிந்து வெல்லும் இளம் பெண்களின் துணிகளை கிழித்தெறிவற்காக இராணுவ அதிரடி துருப்புக்கள் அமர்த்தப்பட்டனர். எகிப்திலும், ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் பெண்கள் அணியும் ஹிஜாப்புக்கு எதிராக அரசு மட்டத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆட்சியாளர்கள் மூலைச்சலவை செய்யப்பட்ட ஐரோப்பிய கை பொம்மைகளாக முஸ்லிம் நாடுகளில் இருந்தமையால் முஸ்லிம் சமூக நிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகி காணப்பட்டது. காலனித்துவ வாதிகள் முஸ்லிம் நாடுகளில் இருந்து வாபஸ் பெற்றுச் செல்வதற்கு முன்பு முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை குலைப்பதற்காக தேசிய வாதம், இன,மத வாதம் என்பவற்றின் கருத்துக்களை வலுப்பெறச் செய்வதில் தீவிரமாக கவனம் செலுத்தினார்கள். இஸ்லாத்திற்கு முந்திய கால நாஸ்தீக வாத ஜாஹிலிய்ய கொள்கைகளை செயலில் இறக்கினர். இதன் விளைவாக ஒரே சமூகமாக (உம்மத்)வாழ்ந்து வந்த முஸ்லிம் சமூகம் சிலர் சிலரை எதிர்த்துப்போராடும் குழுக்களாகவும் மாறிவிட்டனர். பிரிவினை வாதத்திலும், மதக் கருத்து வேறுபாடுகளை தோற்றுவிக்கக் கூடியவர்களாகவும் மாறினர்.

அற்ப விடயங்களில் மூழ்கி பிரச்சினைப்பட்டனர். முஸ்லிம்களின் சமூக நலச்சட்டங்களை ஐரோப்பியர் மாற்றியமைத்து, தங்களது சொந்த நீதியியல் சட்டங்களையும், நிர்வாகத்திட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் அறிமுகப்படுத்தினார்.

அவர்களின் தீய பிரச்சாரங் களினூடாகவும், தொடர்பூடகங்களினூடாகவும் முஸ்லிம் சமூகத்தின் அடிநாதமான குடும்ப அமைப்பில் அமைதியின்மையையும், குழறுபடிகளையும் ஏற்படுத்தி, முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் ஒழுக்கக் கேட்டையும், சீரழிவையும் ஏற்படுத்தினார்கள். இக்காலப்பகுதியில் முஸ்லிம் சமூகம் காலனித்துவவாதிகளின் கருத்துப் படையெடுப்புகளுக்கு பெரிதும் ஆட்பட்டு கல்வி, பொருளாதாரம், கலாசாரம், அரசியல், சமூகம் என எல்லாத்துறைகளிலும் பின்தங்கி பலவீனமுற்றிருந்தனர்.

மரபு வழி அறிஞர்களின் கருத்துக்களை ஏற்று நடந்த ஒரு சாராரும், மேற்கத்திய நவீன அறிஞர்களின் கருத்துக்களில் கவரப்பட்ட ஒரு சாராரும் என முஸ்லிம்களுல் இரு சாரார் காணப்பட்டனர். இதே நேரம் மரபு வழி அறிஞர்களை, மேற்கத்திய பாணியில் கற்ற நவீன அறிஞர்கள் விமர்சிக்கும், எதிர்க்கும் நிலையும், மரபு வழி அறிஞர்கள் நவீன கல்வி கற்றவர்களை விமர்சிக்கும் நிலையும் காணப்பட்டதோடு, முஸ்லிம் சமூகம் யாருடைய கருத்துக்களை, சிந்தனைகளை ஏற்பது என்ற குழப்ப நிலைக்கும் ஆளாகியிருந்தது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல முஸ்லிம் உலகு அன்று தேசிய வாதச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டு இனம், மொழி, நாடு, நிறம் என்ற வகையில் பிளவுபட்டுக் காணப்பட்டது. தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்வதை விட துருக்கியர், அறேபியர், இந்தியர் என்று கூறிக் கொள்வதை விரும்பினர். கீழ் வரும் ஒரு கூற்றிலிருந்து அதனைப் புரிய முடிகிறது அதாவது: பிரித்தானியர்களின் வாக்குறுதிகளை விழுங்கிய மக்காவின் கவர்னராக இருந்த 'ரீப் ஹுஸைன்**"நாங்கள் முதலில் அறபிகள், பிறகே முஸ்லிம்கள்"**என்ற கருத்தை வெளியிட்டார்.இவ்வாறு அன்று காலனித்துவ முஸ்லிம் நாடுகள் "கிறிஸ்தவ சமய சார் கல்வி நடவடிக்கைகள்","தேசியவாதச்சிந்தனைகள்",(Nationalism) "பிராந்தியம்" (Regjionalism) "மதக்கருத்து வேறுபாடுகள், உட்பூசல்கள்","தனியார் சட்டங்கள்","சமூகப் போராட்டசிந்தனைகள்","பொருளியல் போராட்டங்கள், அடக்கு முறைகள் (Colonial) பிரித்தாழும் ஆட்சி பற்றிய சிந்தனைகள் (Divide)" இவை போன்ற காரணங்களால் சீர் குலைந்து சீர்திருத்தத்தை வேண்டி நின்றது.

***20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில்* முஸ்லிம் நாடுகளின் அரசியல் நிலை.**

ஐரோப்பா தமதாதிக்கத்தை ஸ்தீரப்படுத்திக்கொள்ளவும், தமது சிந்தனைகளை நடைமுறைப்படுத்தவும் தாம் கைப்பற்றிய முஸ்லிம் நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளிலேயே தமது முழுக்கவனத்தையும் முதலில் செலுத்தின. தமது காலனித்துவ நோக்கங்களுல் மிகப்பிரதானமாக முஸ்லிம் நாடுகளை அரசியல் ரீதியாக பிளவுபடுத்துவதே முக்கியமானதாக காணப்பட்டது. இதன் முதல் நடவடிக்கையே தமது சிந்தனைப் போக்கில் செயற்படக் கூடியவர்களை தாம் கைப்பற்றிய முஸ்லிம் நாடுகளின் ஆட்சியாளர்களாக நியமிப்பதாகும்.

இந்த வகையில் உதாரணமாக பக்தாத்தில் மன்னர் பைஸல், துருக்கியில் கமால் அத்தாதுர்க் போன்றவர்களையும் பாகிஸ்தானில் முகம்மது அலி ஜின்னா,ஈரானிய மன்னர் ஷா போன்றவர்களையும், எகிப்தில் மன்னர் அப்துல் நாஸிர் போன்றவர்களையும் குறிப்பிடலாம். உஸ்மானிய தலைநகராகத்திகழ்ந்த துருக்கியைப்பொறுத்த வரையில் அங்கு முஸ்லிம் உம்மத்தின் மத்தியில் ஐரோப்பியரால் இனவாதமும், பிரதேச வாதமும் தூண்டி விடப்பட்டு அவை வளர்க்கப்பட்டதன் காரணமாக அங்கு கிலாபத் ஆட்சி வீழ்ச்சியுற்றது. முஸ்தபா கமால் அங்கு ஆட்சியை கைப்பற்றி கிலாபத் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அங்கு சமய சார்பற்ற அரசை உருவாக்க அடித்தளமிட்டார். ஐரோப்பிய கைபொம்மையாக இருந்து ஆட்சி செலுத்திய இவர் துருக்கியில் பல மாற்றங்களை இஸ்லாத்திற்கும் அதன் கொள்கைக்கும் முரணாக ஏற்படுத்தினார்.பெண்கள் முகமூடி அணியக் கூடாதென்றும், துருக்கித் தொப்பிக்குப் பதிலாக ஐரோப்பியத் தொப்பி அணிய வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார். துருக்கித்தேசிய வெறி கொண்ட முஸ்தபா கமால் அரபுப் பாசையும் இஸ்லாமும் களையப்பட வேண்டும் என முடிவுகட்டி பல தீர்மானங்களை எடுத்துச் செயற்பட்டார். துருக்கி மொழியிலிருந்த அரபு மொழிச் சொற்கள் அகற்றப்பட்டன. "அதான்" கூட துருக்கி மொழியிலேயே சொல்லப்பட்டது. இன, மொழி, தேசிய பேதங்களின்றி ஒருங்கிணைந்த அரபு மொழியில் அல்-குர்ஆன் ஓதப்படுவதும் தடுக்கப்பட்டு மாற்றம் கண்டன. இவ்வாரான கலாச்சார பண்பாட்டு சீரழிவுகள் துருக்கியில் ஏற்படக் காரணம் துருக்கியின் அன்றைய அரசியல் நிலையே என்றால் மிகையாகாது. இதே போன்று மொறோக்கோவில் அரசியல் அதிகாரத்தின் மூலம் இஸ்லாத்தின் வழிகாட்டல்கள் கட்டுப்படுத்தப்பட்டது. அல்ஜீரியாவில் இஸ்லாமியப்பிரச்சாரம் தடுக்கப்பட்டது. மீறிச்செயற்பட்ட ஆலிம்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அங்கு மேற்கத்திய ஜனநாயகத்தின் அடிப்படையில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற இஸ்லாமிய அமைப்பு தடை செய்யப்பட்டது. அதன் பல்லாயிரம் ஊழியர்கள் ஸஹீதாக்கப்பட்டார்கள். டூனிசியாவில் ஆட்சி செய்த ஹபீப் பூவர்ஜிபா என்பவர் அந்நாட்டில் இஸ்லாத்தை இல்லாதொழிக்கச் செய்த முயற்சிகள் ஒன்றிரண்டல்ல. மேலும் ஸிரியா,ஈராக் இரு நாடுகளினதும் ஆட்சிப் பொறுப்பு பாத் சோஸலிஸ கட்சியின் வசம் காணப்பட்டது. இக் கட்சி "மைக்கல் அயலாக்" என்ற நாத்திகனால் உருவாக்கப்பட்ட கட்சியாகும். அக்கட்சியின் கீழ் ஸிரியாவில் காணப்பட்ட இஸ்லாமிய அமைப்புக்களின் உருப்பினர்கள் பலர் அக்கட்சி ஆட்சியாளர்களால் சொல்ல முடியாத இன்னல்களுக்கு உட்பட்டார்கள். ஈராக்கில் கூட ஆட்சியாளர்களால் இஸ்லாம் ஒதுக்கப்பட்டு, அவசியமானபோது அதற்கு மாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்ட மார்க்கமாகக் அது காணப்பட்டது.

அரபு உலகில் மதச்சார்பின்மை தோன்றி வளர்ந்த காலப்பகுதியில் முஹம்மது அலி பாஸா முதல் கமால் அப்துல் நாஸர் வரை பெருந்தொகையான அரச தலைவர்களும், இராணுவ ஆட்சியாளர்களும் தோற்றம் பெற்றார்கள். கமால் அப்துல் நாஸர் சமய சார்பற்ற அரசை எகிப்தில் ஓங்கச் செய்தார்.

நாஸர் முஸ்லிமாக இருந்த போதிலும் அரசியலில் இஸ்லாம் செல்வாக்குச் செலுத்துவதை அவர் விரும்பவில்லை, அவரது அபிப்பிராயத்தின் படி சமய சார்புள்ள அரசாங்கமென்பது பிழையானதென்று கருதப்பட்டது. எகிப்தில் இ:்.வானுல் முஸ்லிமை மிக வன்மையாக அடக்கி ஒடுக்கியமை நாஸரின் அபிப்பிராயத்தை விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றது.

அரசியல் ஆட்சிப்பரப்பிற்க்கும், சமய ஆட்சிப்பரப்பிற்கும் பாரிய இடை வெளியைக் கொண்டு வருவதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் முயற்சித்தார்கள். யூத சியோனிஸ சக்தியில் உருப்பெற்ற ஓர் இயக்கமாக அன்று திகழ்ந்த மாஸோனிய யூத அமைப்பு இஸ்லாத்திற்கும், அதன் அரசியல் மற்றும் அதன் இதர கொள்கைகளுக்கும் எதிராக காணப்பட்ட ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பே இஸ்லாமிய கிலாபத்தின் உஸ்மானிய பேரரசு 1924 மார்ச் 23 இல் துருக்கியில் வீழ்சிச்சியடைவதற்கு காரணமானது. முஸ்லிம்களை அரசியல் ரீதியாக மந்த நிலைப்படுத்த பெரிதும் முயன்றவர்கள் இந்த மாஸோனிய யூத அமைப்பைச் சேர்ந்தவர்கள் சுமார் ஐந்து மில்லியன் தங்க ஜூனைஹாத்களை இந்த அமைப்பு உஸ்மானியப்பேரரசின் வீழ்ச்சிக்காகச் செலவிட்டது. ‘‘உஸ்மானிய அரசை கவிழ்க்காது சுதந்திரமில்லை’’ என்ற சுலோகத்தை ஐரோப்பா முழுவதும் இந்த அமைப்பு பரப்பியது. இஸ்லாமிய அரசியல் சீர் குலைக்கப்பெரிதும் பாடுபட்ட அமைப்பாக இது அன்று காணப்பட்டது.

அன்றைய அரசியல் நிலை மிகப்பயங்கரமாகவே இருந்தது. ஏனெனில் மாஸோனிய யூத அமைப்பின் ஒரு பிரிவான MRF‘‘Masonic Reform Movement’’ அதாவது ‘‘மாசோனிய புனருத்தான முன்னணி’’ இதில் பல முஸ்லிம் புத்தி ஜீவிகள், ஆட்சியாளர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர்.ஆப்கானிய மன்னன் அமானுல்லாக்கான்,ஈரானிய சக்கரவர்த்தி அலி ரிழா அல் பஹ்லவி, துருக்கிய கமால் அத்தாதுர்க், அஹ்மத் அமீர் போன்ற பலரும் அதில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். காலனித்துவ காலப்பகுதியில் முஸ்லிம்களின் விலைமதிக்க முடியாத சக்தியாக இருந்த அரசியல் ‘‘கிலாபத்’’ பலம் காலனித்துவ வாதிகளால் கூருபடுத்தப்பட்டது,‘‘பிரிந்து வாழ், பிரித்து ஆட்சி செய்’’ என்ற உத்தியையும், அரச தந்திரத்தையும் இவர்களே முஸ்லிம் உலகில் அறிமுகப்படுத்தினர்.

இதன் விளைவாக முஸ்லிம் சாம்ராஜ்யங்கள் துண்டு துண்டாகப்பிளவுண்டு, அந்தப்பிளவுகளிலிருந்து ஒரு துணைப்பிரிவு உண்டாகி அது துணை அரசுகளாகவும், நகர ஆட்சிகளாகவும் சிதருண்டு காணப்பட்டது. முதலாம் உலக யுத்தத்தில் தோல்வி கண்ட துருக்கியப்பேரரசின் ஆளுகைக்கு உற்பட்டிருந்த மேற்காசிய முஸ்லிம் பிரதேசங்களை ஐரோப்பியர் கைப்பற்றி சிறு சிறு நாடுகளாக கூறு போட்டிருந்தனர். அவற்றின் எல்லைகளை புதிதாக வரைந்து தம் கைப்பாவைகளை அதன் மன்னர்களாக்கியிருந்தனர்.

மலேசியா, இந்தோநேசியா முதலான முஸ்லிம் நாடுகளிலும், முஸ்லிம்கள் கனிசமான அளவு சிறுபான்மையினராக வாழ்ந்து வந்த இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் அந்நாடுகளின் பொருளாதார வளங்களைச்சுரண்டவும், தொடர்ந்தும் அந்நாடுகளை அடிமை நாடுகளாக வைத்திருக்கும் அபிலாசையுடன் தமது அரசியல் சுதந்திரத்தை ஒழிக்கவும் நடவடிக்கை எடுத்தனர். மேலும் இந்த ஐரோப்பியர் ஒரு நாடு இந்நொரு நாடுடன் தொடர்ந்து சண்டையிலும், குழப்பத்திலும் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக நீண்ட கால சமூக அமைதியின்மைகோட்பாட்டை அரசியல் செயற்பாடுகளூடாக தூண்டிவிட்டார்கள். காலனித்துவ கெடுபிடிகளின் காரணமாக முஸ்லிம் உம்மத்தின் ஓர் அங்கமான அரபிகள் அவர்களுடைய சாம்ராஜ்யங்களை சுமார் 22 பகைமை அங்கங்களாக கூறு போட்டுக் கொண்டனர். பழைய குழ, கோத்திர ஆட்சி முறை மீண்டும் தலை தூக்கி ஒவ்வாரு அங்கத்திற்கும் ஒரு இளவரசரும், அரசரும் தோன்றலானார்கள்.

மேலும் ஒரே கிலாபத்தின் கீழ் இருந்த இஸ்லாமிய அரசை 50 இற்கும் மேற்பட்ட சிறு சிறு நாடுகளாக்கி முஸ்லிம்களின் அரசியல் ரீதியான பலத்தை குன்றச்செய்தனர். நாடுகளுக்கிருந்த பாரம்பரிய எல்லைகளை மாற்றச்செய்து புதிய எல்லைகளை உருவாக்கியிருந்தனர். மாத்திரமன்றி அதுகாலவரை ஆட்சியுரிமைகளை அனுபவித்திராதவர்களை ஆட்சியில் அமர்த்தியும், எல்லைப்பிரச்சினைகளுக்கு அவர்களை சொந்தக்காரர்களாக்கி அவர்களை எப்பொழுதும் தமது உதவியை நாடக்கூடியவர்களாகவும் ஐரோப்பியர் ஆக்கியிருந்தனர். ஜனநாயக அமைப்பு என்ற பெயரில் கட்சிகளை உருவாக்கி தாம் உருவாக்கிய படித்த வர்க்கத்தினருக்கு அரசியல் முக்கியத்துவத்தை பெற்றுக்கொடுத்திருந்தனர். நாடுகளுக்குச் சுதந்திரம் அளித்துச் செல்லும் போதும் இஸ்லாமிய வழியிலன்றி மேற்கின் சமய சார்பற்ற சிந்தனை வழியில் பயிற்று விக்கப்பட்டவர்களிடையே அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்தனர்.

மேலும் அன்று இஸ்லாமிய ஆட்சி முறையை ஏற்பது சுரண்டலுக்கு சாவுமணியாகும் என்று கருதிய காதியானிச்செல்வாக்கிற்குட்பட்ட பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அதனை எதிர்த்த மௌலானா மௌதூதியையும் தூக்கிலிட முடிவெடுத்த சம்பவமும், எகிப்தில் காணப்பட்ட தரம் கெட்ட அரசியல் போக்கை கடுமையாக சாடிய ஹஸனுல் பன்னா அவர்களை சுட்டுக் கொண்ட சம்பவமும்,ஈரானில் இமாம் கொமைனியின் இஸ்லாமிய புரட்சிக்கு எதிராக எழுந்த கோஸங்கள் தொடர்பான வரலாறுகளும் அன்றைய காலனித்துவ முஸ்லிம் நாடுகளில் காணப்பட்ட அரசியல் நிலைமைகளை தெளிவாக படம் பிடித்துக்காட்டுகிறது.

**காலனித்துவ முஸ்லிம் நாடுகளில் இஸ்லாமிய சீர்திருத்த முயற்சிகள்.**

இஸ்லாமிய சீர்திருத்தப்பணித் தொடரில் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகள் ஒரு முக்கிய காலகட்டங்களாகும். இஸ்லாமிய கிலாபத் முஸ்லிம்களிடமிருந்து பறிபோய், முழு முஸ்லிம் உலகும் காலனித்துவ வளைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காலப்பகுதியும் இதுதான்.

ஆயுத ரீதியாக முஸ்லிம்களை பலவீனப்படுத்துவது பயன்தராது எனக் கருதி இஸ்லாத்தின் எதிரிகள் சிந்தனா ரீதியில் முஸ்லிம்களை கூறு படுத்தும் நவீன யுத்த தந்திரத்தில் யூத கிறிஸ்தவ மேற்குலகம் இறங்கத்தொடங்கிய காலப்பகுதியும் இதுதான்.

அனைத்துக்கும் மேலாக பல முஸ்லிம் புத்தி ஜீவிகளும், முஸ்லிம் ஆட்சியாளர்களும் முஸ்லிம் நாடுகளிலேயே காலனித்துவ வாதிகளின் கைபொம்மைகளாக செயற்பட்டு வந்ததும் இக்காலப்பகுதியிலேயாகும். மேலும் சர்வதேச முஸ்லிம் உம்மத் பல அரசியல், சமய, சமூக துறைகளிலும் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததும் இக்காலப்பிரிவிலாகும்.

இக்கால ஐரோப்பிய காலனித்துவச் செல்வாக்கு முஸ்லிம் உலகை சமய, சமூக, அரசியல், கலாச்சார, பண்பாட்டு துறைகளில் சீரலிவை ஏற்படுத்திக் கொண்டிருந்த வேளையில் அத்துறைகளை சீரமைக்க முனைந்து பல சீர்திருத்த சிந்ததனையாளர்களும்,அறிஞர்களும் தோன்றி தம்மாலான பணிகளை முஸ்லிம் உலகின் சுபீட்சத்துக்கு வழங்கத் தொடங்கினர். குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் நிலவிய சமூக, சமய, அரசியல் நிலைகளை சீர்படுத்த முக்கியமான மூன்று சீர்திருத்த இயக்கங்கள் இஸ்லாமிய உலகில் தோன்றியது.

எகிப்தில் 'சையித் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட *''இ.்.வானுல் முஸலிமீன்''*. (1929),இந்திய மேவாத்தில் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களால் தோற்று விக்கப்பட்ட *''ஜமாத் தப்லீக்''*. (1930),இந்தியாவில் தோன்றி பாகிஸ்தானை மையமாகக் கொண்டு வளர்ச்சி கண்ட மௌலானா அபுல் அ.்.லா மௌதூதி (ரஹ்) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட *''ஜமாஆதே இஸ்லாமி''*. (1947)

இவர்கள் இவ் இயக்கங்களினூடாக அன்று நிலவிய சமய, சமூக, அரசியல் இழி நிலைகளைக் கருத்தில் கொண்டு, இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளை இனங்கண்டு, முஸ்லிம்களின் வீழிச்சிக்கான காரணிகளை இனங்காட்டி தமது சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டனர். இவ்வியக்கங்களின் சீர்திருத்த முயற்சிகளும், அதனைத் தோற்றுவித்த சீர்திருத்தவாதிகளின் சிந்தனைகளும் அவர்கள் வாழ்ந்த சூழலில் காணப்பட்ட சமய, சமூக, அரசியல் சீர்கேடுகளை கவனத்தில் கொண்டு அவற்றை சீர்படுத்தவே முயற்சித்த போதிலும், காலவோட்டத்தில் அவ்வியக்கங்களின் சீர்திருத்தச் செல்வாக்கு உலகின் பல முஸ்லிம் நாடுகளையும் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்து.

இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் காலனித்துவத்தின் பயங்கரமான அபாயத்தை முஸ்லிம் உலகில் குறிப்பாக எகிப்தில் கண்டார்கள், அனுபவித்தார்கள். கி.பி 1924 இல் கிலாபத் வீழ்ச்சியை கண்ணூடாக அனுபவித்தார்கள். எகிப்தின் அரசியல், சமய, சமூக வீழ்ச்சிப் போக்கு கண்டு கண்ணீர் வடித்தார்கள்.அந்தக் கவலையின் வெளிப்பாடாக இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தை ஆரம்பித்து எகிப்திய அரசுக்கெதிராக செயற்பட்டார்கள்.

இன்றும் கூட உலகலாவிய ரீதியில் பல எழுச்சிப் பேரலைகளை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பெருமை இந்த சீர்திருத்த இயக்கத்தையும் சாரும்.

ஒரே நேரத்தில் அவ்வியக்கத்தை ஒரு அரசியல் அமைப்பு, ஒரு சூபித்துவ முறைமை, ஸுன்னத் வல் ஜமாஅத் வழிமுறை என இமாம் அறிமுகம் செய்தார்கள். படித்தவர்களும், பாமரர்களும் இதன் சிந்தனைகளில் கவரப்பட்டனர். செய்யிது குதுப், யூஸுப் அல்கர்ளாவி, முஹம்மது அல் கஸ்ஸாலி, முஹம்மது குதுப், அப்துல் காதர் அவ்தா என்ற இஹ்வான் இயக்கத்தின் அறிவுப் பொக்கிசங்களை 20 ஆம் நூற்றாண்டு கண்டது. இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனை வரலாற்றில் மறக்க முடியாத பங்களிப்பை செய்தது. எகிப்தின் இஸ்லாமிய ஆட்சிக்காக பாடுபட்டனர். யூதர்கள் மற்றும் ஆங்கிலேயர்களுக்கெதிராக போராடி சமய, சமூக, அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த முயற்சித்தனர்.

அடுத்து சீர்திருத்த முன்னோடியாக மௌலானா மௌதூதி திகழ்ந்தார்கள். இஸ்லாமிய கிலாபத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனையுடன் சீர்திருத்தப்பணிகளைத் தொடர்ந்தார்கள். முஸ்லிம் சமூகத்தை காலனித்துவ கெடுபிடிகளிலிருந்து விடுவிக்க 1941 இல் ஜமாதே இஸ்லாமியை தோற்றுவித்தார்கள். இஸ்லாமிய ஷரீஆவை கட்டிக்காக்க உழைத்ததோடு, இந்திய சுதந்திற்காகவும் உழைத்தார்கள். சுதந்திரத்தோடு பாகிஸ்தான் எனும் பெயரில் ஓர் முஸ்லிம் நாடு தோன்றுவதற்கே முயற்சித்த பெருமை இவரையும் சாரும்.

பாகிஸ்தான் இஸ்லாமிய நாடாக பிரிந்த போதும் அன்று காணப்பட்ட காலனித்துவச் சிந்தனைப் போக்கையுடைய ஆட்சியாளர்களை மௌலானா கடுமையாகச் சாடினார். முழுமையாக இஸ்லாமிய ஆட்சியையும், ஷரீஆ வழிமுறைகளையும் பாகிஸ்தானில் ஏற்படுத்த முயற்சித்தார். இஸ்லாமிய சமய, சமூக, சீரழிவுகளை காலனித்துவ வாதிகளின் கூலிகளாக இருந்து கொண்டு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஹாதியானிச் சிந்தனைகளை கடுமையாக எதிர்த்தார். “காதியானி மஸாலா” எனும் நூலைக்கூட எழுதி பூரண இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். தனது அரசியல், சமய, சமூக பொருளாதார துறைகள் தொடர்பான பல நூல்கள் மூலம் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டார். பாகிஸ்தானை மையமாகக் கொண்டு தனது சிந்தனைகளும், இயக்கப்பணிகளும் உருவானாலும், அச்சீர்திருத்த முயற்சிகள் முஸ்லிம் உலகையே அவாவி நிண்டது எனலாம்.

இதே போன்று மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களின் பணிகள் அரசியல் தொடர்பாக காணப்படாவிட்டாலும் அன்று நிலவிய சமய, சமூக சீர் கெட்ட நிலைகளைக் கருத்தில் கொண்டு அயராது பாடுபட்டார். இதற்காக ஜமாஅத் தப்லீக் இயக்கத்தை தோற்றுவித்து பூரண இஸ்லாமிய சமய, சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முயற்சித்தார்.

இவ்வாறு இயக்க ரீதியாக மாத்திரமன்றி, தனிப்பட்ட ரீதியாகவும் முஸ்லிம் சீர்திருத்த அறிஞர்களால் காலனித்துவத்தால் மாசுபட்டிருந்த இஸ்லாமிய உலகின் சமய, சமூக அரசியல், நிலைகளை சீர்திருத்த எடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக இஸ்லாம் எழுச்சி பெறலானது. மாத்திரமன்றி இத்தகைய சீர்திருத்த இயக்கங்களின் முயற்சிகள்தான் காலனித்துவத்திலிருந்து சுதந்திர வாடையை முஸ்லிம் உலகிற்கு ஏற்படுத்தி கொடுத்தது என்றால் மிகையாகாது.

**சாராம்சமும் முடிவுரையும்**

எனவே 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் உலகை படிப்படியாக ஆக்கிரமித்த ஐரோப்பியர் காலனித்துவ ஆதிக்கம், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியல் வலுப்பெற்று முஸ்லிம் உலகு சமய, சமூக அரசியல், ரீதியில் இழி நிலையடைந்து காணப்பட்ட வேலையில் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனை எழுச்சி அலைகள் வலுப்பெற்று முஸ்லிம் உலகின் அரசியல், சமய, சமூக துறைகளில் ஓர் மீள் நிலையை ஏற்படுத்திய பெருமை இத்தகு இஸ்லாமிய சீர் திருத்தவாதிகளையே சாரும்.

மேற்படி இப்பின்புலத்தை முன்னறிவாகக்கொண்டு இஸ்லாத்தின் எழுச்சிக்கு இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்கள், இஸ்லமிய சீர்திருத்த சிந்தனையாளர்கள், முஜத்திக்கள், முஜாஹிதீன்களின் பணிகள் தொடரும் காலமெல்லாம் இன்றைய முஸ்லிம் உலகு அனுபவித்துக்கொண்டிருக்கும் அரசியல், சமய,சமூக சவால்களைக் கூட முறியடித்து மீண்டும் இஸ்லாம் தனது பலத்தை நோக்கிப் பயணிக்கலாம் என்பதில் சந்தேகமே இல்லை.

## References

[1] Abul Ala Maududi, 1965, “Short History of Islamic Revivalist Movements” Islamic pub. Lahore.

[2] Adam, C.C. 1933, “Islam and Modernism in India and Pakistan 1857-1964” London.

[3] Choudhury.G.W.1993, "Islam and the Modern Muslim World" London.

[4] Gibb, H.A. 1947, "Modern Trends in Islam" Chicago.

[5] Iqbal, M. 1940, "The Reconstruction of Religious thought" Lahore.

[6] Jamil Ahamed, M.A. 2003, "Alaippuppani yan yappadi" Islamic trust India.

[7] Muhammed Legenhausen, 2000,"Contemporary Topics of Islamic Thought" Tehran.

[8] Voll, J.O. 1982, "Islam, Continuity and Change in the Modern World" New York.

[9] Maulana.S.H.2006. "Islamiya Ulahum Sawalhalum" Millennium pub.Sri Lanka.

[10] Rahman.F. 1979, "Islam" Chicago University press Illinois.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு